அடகு நகை மீட்டு இன்றைய மார்க்கெட் விலைக்கு விற்க நீங்கள் இருக்கும் இடத்திலேயே உடனடி பணம் நல்ல அணுகுமுறை
தொடர்புக்கு : 70944 40944
[அரசு அங்கீகாரம் பெற்றது]

admin@dhinakani.com
RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி
NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்

KANI GYM
CALL:9894808044

மலர்:03 | இதழ்:221 | 4 பக்கங்கள் | 10:03:2026 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ,6 | வருடசந்தா ரூ,1825



**வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்**
**குறியெதிர்ப்பை நீர துடைத்து.**

**விளக்கம்:**
ஈகையாவது இல்லாதார்க்கு யாதானும் ஒன்றைக் கொடுத்தல்; இஃதொழிந்த கொடையெல்லாம் குறியெதிர்ப்பைக் கொடுத்த நீர்மையாதலையுடைத்து. இது கொடுக்குங்கால் இல்லார்க்குக் கொடுக்கவேண்டுமென்றது.

## நேபாள ஜென்ஸீ போராட்டம்: அரசிடம் அறிக்கை சமர்ப்பிப்பு



காத்மாண்டு: மார்ச்,10 நேபாளத்தில் நடைபெற்ற ஜென் இஸட் இளைஞர்கள் போராட்டம் தொடர்பான அறிக்கை, இடைக் கால அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நேபாளத்தில் அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் அந்நாட்டின் முன்னாள் பிரதமரும், சிபிஎன்-யுஎம்எல் கட்சித் தலைவருமான கே.பி. சர்மா ஒளியை வீழ்த்தி, ராஷ்ட்ரீய சுதந்திர கட்சியின் இளம் தலைவர் பாலேந்திர ஷா பாலன் (35) வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார்.

கடந்த ஆண்டு ஜென் இஸட் இளைஞர்களின் போராட்டத்தைத் தொடர்ந்து பதவி விலகிய கே.பி.சர்மா ஒளியை எதிர்த்து, ஜாப்பா-5 தொகுதியில் ராஷ்ட்ரீய சுதந்திர கட்சியின் பிரதமர் வேட்பாளர் பாலேந்திர ஷா பாலன் போட்டியிட்டார். 'ராப்' இசைக் கலைஞரான பாலேந்திர ஷா பாலன், காத்மாண்டு நகர மேயராக இளைஞர்களின் நன்மதிப்பை ஏற்கெனவே வென்றவர். விரைவில் இவர் பிரதமர் பதவியை ஏற்கவுள்ளார்.

நேபாள அரசின் ஊழல் மற்றும் சமூக ஊடக தடைகளுக்கு எதிராக கடந்த ஆண்டு செப்டம்பரில் இளைஞர்கள் (ஜென் இஸட்) போராட்டத்தில் குதித்தனர். இந்த ஜென் இஸட் போராட்டம் நாடு முழுவதும் தீவிரமடைந்து வன்முறை வெடித்தது. அரசு கட்டிடங்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது.





திண்டுக்கல் கோயிலில் இருந்து 1957-ல் திருடப்பட்டது இங்கிலாந்து அருங்காட்சியகத்தில் இருந்த சிலை இந்தியாவிடம் ஒப்படைப்பு தமிழகத்தின் திண்டுக்கல் தாடிக்கொம்பு அருள்மிகு சௌந்தர்ராஜ பெருமாள் திருக்கோவிலில் இருந்து கடந்த 1957-ம் ஆண்டு திருமங்கை ஆழ்வார் சிலை திருடு போனது. இங்கிலாந்தில் லண்டனில் இந்தியா ஹவுஸில் நடந்த விழாவில் திருமங்கை ஆழ்வார் சிலை முறைப்படி இந்திய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டது




திருப்பூர் மாவட்டம் தாராபுரம் நகராட்சியில் மகளிர் தினத்தை முன்னிட்டு பெண் தூய்மை பணியாளர்களுக்கு சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

நகராட்சி தலைவர் பாப்பு கண்ணன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நகராட்சியில் பணியாற்றும் சுமார் 120 பெண் தூய்மை பணியாளர்களுக்கு கேக் வெட்டி மகளிர் தின வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அவர்களுக்கு நினைவு பரிசுகள் வழங்கி, நகரத்தின் தூய்மையை காக்க அவர்கள் ஆற்றும் சேவையை பாராட்டினர். நிகழ்ச்சியில் நகராட்சி கவுன்சிலரும் திமுக நகரச் செயலாளர் முருகானந்தம் மற்றும்

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட மகளிர் அணி தலைவர் சரஸ்வதி ராஜேந்திரன் மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் சசிகலா தில்லை முத்து மாவட்ட மகளிர் மகளிர் அணி துணைத்தலைவர் அருக்காணி ராமசாமி ஆகியோர்,

அடுத்து மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் திருமதி ஆனந்தி அவர்கள் மாவட்ட துணை செயலாளர் பிரபாவதி பெரியசாமி நகர நகர மகளிர் அணி அமைப்பாளர் புனிதா சக்திவேல் நகரத் துணைச் செயலாளர் செலின் பிலோமினா நகரத் தொண்டர் அணி அமைப்பாளர் முத்துலட்சுமி மற்றும் கவுன்சிலர்கள் தேவி அபிராமி ராஜாத்தி மருத்துவர் அணி தலைவர் இந்திராணி நகர துணை அமைப்பாளர்கள் சந்திரா உமா..

# கொளத்தூர் தொகுதியில் ரூ.45 கோடியில் 9 திட்டப் பணிகள்: முதல்வர் திறந்து வைத்தார்



சென்னை: மார்ச்,10 கொளத்தூர் தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் முடிவுற்ற பல்வேறு திட்டங்களை மக்கள் பயன்பாட்டுக்கு திறக்கும் விழா நேற்று நடைபெற்றது.

இதில் முதல்வர் ஸ்டாலின் பங்கேற்று, வட சென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சிஎம்டிஏ சார்பில் ரூ.28.25 கோடியில் மேம்படுத்தப்பட்ட முரசொலி மாறன் பூங்கா, கலைஞர் நூற்றாண்டு நாணயம் நினைவுத் தூண், முதல்வர் படைப்பகம், நவீன நூலகம், கொளத்தூர் நவீன அங்காடி ஆகியவற்றை திறந்து வைத்தார்.

தொடர்ந்து, மாநகராட்சி சார்பில் ரூ.4.15 கோடியில் புதிய பள்ளிக் கட்டிடம், பெண்கள் உடற்பயிற்சிக் கூடம், 2 நியாயவிலைக் கடைகளுடன் கூடிய பல்நோக்கு மையக் கட்டிடம் ஆகியவற்றையும் திறந்து வைத்தார். சென்னை குடிநீர் வாரியம் சார்பில் பல்வேறு கழிவுநீர் உந்து நிலையங்களில் ரூ.12.48 கோடியில் மின்னியல், இயந்திரவியல், கட்டிடக் கட்டமைப்புகளை மேம்படுத்தி, வலுப்படுத்தப்பட்ட பணிகளை திறந்து வைத்தார்.

இதைத் தொடர்ந்து, பல்லவன் சாலையில் உள்ள டான் போஸ்கோ பள்ளி வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ரம்ஜான் பண்டிகையை முன்னிட்டு 3,200 முஸ்லிம்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

அனிதா அச்சீவர்ஸ் அகாடமியில் 'டேலி' பயின்ற, 53 மாணவிகள், 32 மாணவர்களுக்கு மடிக்கணினிகள், சான்றிதழ்களையும், தையல் பயிற்சி முடித்த 320 பெண்களுக்கு தையல் இயந்திரங்கள், சான்றிதழ்களையும் வழங்கினார்.

கலைஞர் கண் மருத்துவமனையில் கண் பரிசோதனை செய்துகொண்ட 200 பேருக்கு கண் கண்ணாடிகள், புத்தாடைகளையும் முதல்வர் ஸ்டாலின் வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் அமைச்சர் சேகர் பாபு, மேயர் பிரியா, எம்.பி.க்கள் கலாநிதி வீராசாமி, ஆர். கிரிராஜன், எம்எல்ஏக்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், வெற்றியழகன், சிஎம்டிஏ உறுப்பினர் செயலர் கோ. பிரகாஷ், சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## தாராபுரம்-குண்டடம் பகுதிகளில் ரூ.12.82 கோடி திட்டப் பணிகளை செய்தித் துறை அமைச்சர் சாமிநாதன் மனித வல மேலாண்மை துறை அமைச்சர் கயல்விழி ஆகியோர் பூமி பூஜை செய்து தொடங்கி வைத்தனர் .



திருப்பூர் : மார்ச்,10 மாவட்டம் தாராபுரம் மற்றும் குண்டடம் ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட பகுதிகளில் ரூ.12.82 கோடி மதிப்பீட்டில் உப்பாறு ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி மற்றும் பல்வேறு சாலை மேம்பாட்டுப் பணிகள் தொடங்கப்பட்டன. தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு. பெ.சாமிநாதன், மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் பணிகளை துவக்கி வைத்தனர்.

தாராபுரம் ஊராட்சி ஒன்றியம் நஞ்சியம்பாளையம் அருகே நீர்வளத்துறையின் சார்பில் ரூ.7.53 கோடி மதிப்பீட்டில் உப்பாறு ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி தொடங்கப்பட்டது. 1,178 மில்லியன் கன அடி கொள்ளளவு, 1.80 மீட்டர் உயரம், 95 மீட்டர் நீளம் கொண்ட இந்த தடுப்பணை மூலம் வருடத்திற்கு மூன்று முறை நிரப்புதலுடன் 3.534 மில்லியன் கன அடி நீர் சேமிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 43 திறந்த கிணறுகள், 2 ஆழ்துளை கிணறுகள் பயன்பெற்று, 144.971 ஏக்கர் நிலப்பரப்பில் பாசனம் மற்றும் குடிநீர் தேவைக்கு உதவியாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டது. வரப்பாளையம், நஞ்சியம்பாளையம், தாராபுரம் வடக்கு, பொன்னாபுரம் உள்ளிட்ட பகுதிகள் பயனடையும்.

மேலும் நபார்டு, ஊராட்சி பொதுநிதி, முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின் கீழ் சகுனிபாளையம் – தொப்பம்பட்டி, தெக்காலூர்–அம்மன் கோவில் சாலை, தாராபுரம் பூளவாடி–புளியந்தோப்பு, ஜோத்தியம்பட்டி – பழையநவக்கொம்பு, மோளரபட்டி, சிறுகிணறு உள்ளிட்ட பகுதிகளில் சாலை அமைப்பு மற்றும் மேம்பாட்டு பணிகள் ரூ.5.29 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்பட்டன.

மூலனூர் அண்ணா நகரில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.10 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட நிழற்குடையும் திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் நீர்வளத்துறை தலைமைப்பொறியாளர் முருகேசன், கண்காணிப்பு பொறியாளர் கார்த்திகேயன், திருப்பூர் மாநகராட்சி 4-ம் மண்டல தலைவர் இல. பத்மநாபன், செயற்பொறியாளர் பிரபாகரன், தாராபுரம் ஒன்றிய செயலாளர் எஸ்.வி.செந்தில் குமார். குண்டடம் ஒன்றிய செயலாளர் சந்திரசேகரன். திமுக நகர துணைச் செயலாளர் கமலக்கண்ணன் மற்றும் உதவி பொறியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.





நேற்றைய தினம்,தாராபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் எஸ். வி. செந்தில்குமார் மற்றும் தாராபுரம் மேற்கு ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் சன் பாலு அவர்களின் முன்னிலையில் தமிழக வெற்றி கழகத்தை சேர்ந்த லோகேஷ் பாபு, பாரதிய ஜனதா கட்சியை சேர்ந்த கிருபாகரன், ஓபிஎஸ் அணியை சேர்ந்த குகன் மற்றும் அஜய், புகழ் மணி ஆகியோர் தாய் கழகமான திராவிட முன்னேற்றக் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.உடன் ஊராட்சி கணேஷ், திருமலைபாளையம் செல்வம், திருமலைபாளையம் இளைஞர் அணி அமைப்பாளர் கனகராஜ் ஆகியோர் பங்கேற்றனர்... மேலும் இதனை எடுத்து பல்வேறு கட்சிகளில் இருந்து இளைஞர்கள் தாய் கழகமான திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைய உள்ளனர்.

## நிலக்கோட்டையில் நடந்த பெருமாள் கோவில் கும்பாபிஷேகத்தில் பக்தர்களுக்கு தீர்த்தம் தெரிவித்த சப் இன்ஸ்பெக்டர்



நிலக்கோட்டை, மார்ச்.10 - திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை அகோபிலன் நரசிம்ம பெருமாள் கோவில் கும்பாபிஷேகம் நேற்று நடைபெற்றது. இந்த கும்பாபிஷேகம் சுமார் 10 ஆண்டுகளுக்கு பின்பு நடைபெற்றதால் நிலக்கோட்டை சுற்றியுள்ள ஏராளமான பக்தர்கள் குவிந்தன. விழாவில் சற்று ருசிகரமாக கும்பத்தில் ஏறிய நிலக்கோட்டை போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் சந்திரகுமார் திடீரென்று கும்பம் அருகே வைக்கப்பட்டுள்ள இருந்த புனித நீரை எடுத்து பக்தர்கள் மீது தெளித்தார். ஒரு போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் திடீரென்று கும்பத்தில் இருந்து புனித நீர் ஊற்றுவதை அறிந்த பொதுமக்கள் பக்தர்கள் மிகுந்த அளவில் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். காவல் பணியையும் அதேசமயம் ஆன்மீகப் பணியையும் சேர்ந்து செய்தது வா ஒரு வகையில் பொதுமக்கள் வரவேற்பு அளித்தனர். இருப்பினும் ஆன்மீக நண்பர்கள் போலீஸ் உடையில் ஆன்மீக பணியில் ஈடுபட்டவை சற்று முகம் சுளித்தபடியே பார்த்தனர்

# தொட்டியம் அருகே மகா மாரியம்மன் கோவில் கும்பாபிஷேகம்

திருச்சி மாவட்டம், தொட்டியம் வட்டம், வரதராஜபுரம் மற்றும் ரெங்கநாதபுரம் கிராமங்களில் அமைந்துள்ள புகழ்பெற்ற அருள்மிகு ஸ்ரீ மகா மாரியம்மன் திருக்கோவில் மகா கும்பாபிஷேக விழா (08032026) மிகச் சிறப்பாக நடைபெற்றது.





கடந்த மார்ச் 5ஆம் தேதி கணபதி ஹோ மத்துடன் தொடங்கிய இந்த வி ழாவில், நாள்தோறும் பல்வேறு கால யாக பூஜைகள் மற்றும் விசேஷ திரவிய ஹோமங்கள் விமரிசையாக நடைபெற்றன. விழாவின் முக்கிய நிகழ்வாக காலை 10.40 மணிக்கு மகா மாரியம்மன் ராஜகோபுரம் மற்றும் மூலஸ்தான விமானங்களுக்கு புனித நீர் ஊற்றப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து காலை 11.00 மணிக்கு மகா மாரியம்மன் மற்றும் பரிவார தெய்வங்களுக்கு விசேஷt அபிஷேகமும் மகா தீபாராதனையும் காட்டப்பட்டது.

இந்தக் கும்பாபிஷேக விழாவில் வரதராஜபுரம், ரெங்கநாதபுரம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு சாமி தரிசனம் பெற்றுச் சென்றனர். விழாவிற்கு வந்திருந்த அனைத்து பக்தர்களுக்கும் கோவில் நிர்வாகத்தின் சார்பில் அருட்பிரசாதம் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் அதிமுக முன்னாள் அமைச்சர் சிவபதி மற்றும் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர் இதற்கான ஏற்பாடுகளை ஊர் பொதுமக்கள் மற்றும் நிர்வாகஸ்தர்கள் சிறப்பாகச் செய்திருந்தனர்.

# தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் மற்றும் புத்தக வாசிப்பு நற்பணி மன்றம் சார்பில் சர்வதேச மகளிர் தினம் மற்றும் புத்தகப் பார்வை



தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் மாநகர கிளை செயலாளர் தோழர். ஆ.மாரிமுத்து வரவேற்புரையாற்றினார். வழக்கறிஞர் ஐ.பெ. பாலசேகர் தலைமையுரையாற்றினார். கலை இலக்கியப் பெருமன்றம் குறித்தும் தோழர் ஜீவா குறித்தும் மகளிர் தினம் கொண்டாட்டம் குறித்தும் பேசினார். தூத்துக்குடி மாவட்ட ரோட்டரி சங்கத்தலைவர் தொழிலதிபர் ரோட்டரி T. மலர்விழி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். பெண்கள் மற்றும் பெண்களின் வளர்ச்சி குறித்தும் தெளிவு, தைரியம், நேர்மை, நன்றியுணர்வு குறித்து சிறப்பாக பேசினார்.

"பேத்தி கேட்ட கதை" எனும் சிறுகதை புத்தகம் குறித்து புத்தகப் பார்வையாக ஏ.பி.சி. மகாலெட்சுமி கல்லூரி கணிதவியல் மாணவிகள் தேவி மற்றும் துர்கா தேவி தாம் வாசித்து உணர்ந்தவற்றை பகிர்ந்து கொண்டார்கள். எழுத்தாளர் பேராசிரியர் கணியன் செல்வராஜ் தனது ஏற்புரையில் மனிதர்கள் இயற்கையோடு வாழவேண்டும். வன உயிர்களை பாதுகாக்க வேண்டும். அனைத்து உயிரினங்களும் நல்லவையே என்றும் வன உயிர்களிடமிருந்து மனிதர்கள் கற்றுக்கொள்ள வேண்டியது அதிகம் இருப்பதாக தெரிவித்தார். இலக்கிய ஆர்வலர்கள் செல்ல மாரியப்பன், லோகநாதன், பத்மநாதன்,. பாலமுருகன், ஆசிரியர்ராஜகுமார்சாமுவேல், குமிழ்முனைசைமன் ஆகியோர் கலந்துகொண்டனர். தமிழ்நாடு கலை இலக்கியப் பேரவை தருவைக்குளம் செயலாளர் தோழர் லாரன்ஸ் நன்றியுரையாற்றினார். தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் தாளமுத்துநகர் செயலாளரும் புத்தக வாசிப்பு நற்பணி மன்ற அமைப்பாளர் தோழர் அ. ரவி மற்றும் ஸ்பிக் செல்வின் நிகழ்ச்சியினை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

# திருக்கண்ணபுரம் சவுரிராஜபெருமாள் கோவிலில் தெப்ப உற்சவம்; திரளான பக்தர்கள் பங்கேற்பு



நாகை மாவட்டம் திருமருகல் ஒன்றியம் திருக்கண்ணபுரத்தில் சவுரிராஜ பெருமாள் கோயில் அமைந்துள்ளது. இந்தக் கோவில் பற்றி ஆழ்வார்கள் பாடியுள்ளனர். பல்வேறு சிறப்புகள் பெற்ற இந்த கோவிலில் ஆண்டுதோறும் மாசி மகப்பெருவிழா 15 நாட்கள் நடைபெறுவது வழக்கம். அதன்படி இந்த ஆண்டிற்கான மாசி மகப்பெருவிழா கடந்த பிப்ரவரி 23ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி நடைபெற்று வருகிறது. விழாவையொட்டி தங்க பல்லாக்கு, திருமேனி சேவை, தங்க கருட சேவை மற்றும் பல்வேறு வாகனங்களில் சாமி வீதி உலா நடைபெற்றது. தொடர்ந்து தேரோட்டம், திருப்பட்டினம் கடற்கரையில் சமுத்திர தீர்த்தவாரி நிகழ்ச்சியும் நடந்தன. விழாவின் முக்கிய நிகழ்ச்சியான தெப்ப உற்சவம் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது. முன்னதாககாலை பெருமாள் திருமஞ்சனம் நடைபெற்றது. பின்னர் ஸ்ரீதேவி, பூதேவி, ஆண்டாள், பத்மினி நாச்சியார்களுடன், சவுரிராஜப்பெருமாள் தெப்பத்தில் எழுந்தருளினார். கோவிலின் எதிரே அமைந்துள்ள நித்திய புஷ்பகரணி திருக்குளத்தில் மூன்று முறை நூதன பங்களாதெப்பம் என்ற தெப்பம் வலம் வந்தது. தெப்பத்தில் பக்தி பாடல் இன்னிசை நிகழ்ச்சி மற்றும் நாதஸ்வர இன்னிசையும் நடைபெற்றது. தொடர்ந்து நடைபெற்ற தெப்ப உற்சவத்தில் திருமருகல் முன்னாள் ஒன்றியக்குழு தலைவர் ராதாகிருட்டிணன், செயல் அலுவலர் குணசேகரன், திருமருகல் திமுக தெற்கு ஒன்றிய செயலாளர் ஆர்.டி.எஸ்.சரவணன், கோவில் தலைமை கணக்கர் உமா மற்றும்திரளானபக்தர்கள்கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

# ஸ்ரீசித்தர் பீடத்தில் ஸ்ரீ பிரத்தியங்கிரா தேவி ஆலயத்தில் மஹா யாக வழிபாடு; "சாக்தஸ்ரீ" சற்குரு சீனிவாச சித்தர் தலைமையில் கோலாகலம்



ஸ்ரீசித்தர் பீடத்தில் மாசி மாதம் 24ஆம் தேதி 0803 2026 ஞாயிறு அன்று மதியம் 0130க்கு ஶ்ரீவாராஹி அம்மனுக்கு தேய்பிறை பஞ்சமி பூஜை அபிசேகம் மகாயாகம் அன்னதானம் நடைபெற்றது பிரத்தியங்கிரா தேவி ஆலயத்தில் சாக்தஸ்ரீ" சற்குரு சீனிவாச சித்தர் தலைமையில் கோலாகலமாக நடந்தது. உலகில் அன்பு, அமைதி நிலவவேண்டியும், விவசாயம் உள்ளிட்ட அனைத்துதொழில்களும்சிறந்திடவும், பக்தர்கள் வாழ்வில் செல்வ வளம் பெருகி கொழித் திட வேண்டி ஶ்ரீவாராஹிஅம்மனுக்கு மஹா யாக சிறப்பு வழிபாடுகள் காலை முதல் மாலை வரை வெகுசிறப்பாக நடைபெற்றது. ஶ்ரீவாராஹிஅம்மனுக்கு .பால், பன்னீர், தேன், தயிர், சந்தனம், இளநீர் உள்ளிட்ட 64வகையான அபிஷேகமும், தொடர்ந்து, ரோஜா, தாமரை, மல்லிகை, முல்லை மலர்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு, தீபாராதனை நடந்தது. மதியம் பக்தர்களுக்கு மஹா அன்னதானம் வழங்கப்பட்டது. இதில், பக்தர்கள் திரளாக பங்கேற்று வழிபட்டனர். இதற்கான ஏற்பாடுகளை சாக்தஸ்ரீ" சற்குரு சீனிவாச சித்தர் தலைமையில் வழிபாட்டுக்குழுவினர் செய்திருந்தனர்.

# குன்னூரில் காணாமல் போன ஓடை கண்டுபிடிப்பு முட்புதர்கள் அகற்றும் பணி தீவிரம்



நீலகிரி மாவட்டம் குன்னூர் நகராட்சிக்குட்பட்ட 16 வது வார்டு மார்க்கெட், குமரன் நகர், அலாய் சேட் காம்பவுண்ட் பகுதியில் உள்ள ஓடை நீண்ட நாட்களாக தூர்வாரப்படாததால் நாளடைவில் இந்த ஓடை முட்புதர்களால் மறைய துவங்கியது. இதன் காரணமாக மழைக்காலங்களில் ஓடையில் நீர்வரத்து அதிகரித்து இதனை ஒட்டியுள்ள குடியிருப்புகள் பாதிப்படைந்து வருவதுடன்,மழை நீரால் அவ்வப்போது இப்பகுதி மக்கள் நிம்மதி இல்லாமல் இருந்து வந்தனர்.இது மட்டும் அல்லாமல் பாம்பு,கீரி, எலி உள்ளிட்டவை இந்தப் பகுதியில் இருந்து எளிதாககுடியிருப்புபகுதியில்புகுந்துவருகிறது.இதனால்இப்பகுதி மக்கள் பெரும் அச்சம் அடைந்து வந்த நிலையில்,இப்பகுதி அதிமுக வார்டு உறுப்பினர் ரங்கராஜ் முயற்சியின்பேரில் நகராட்சி சார்பில் ஓடையை தூர் வாரும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. இதன் மூலம் ஓடையிலிருந்து வரும் தண்ணீர் தடையின்றி செல்வதால் துர்நாற்றமும் இல்லாமல் மக்கள் நிம்மதி அடைந்துள்ளனர்.

# மலைப்பாதை ஓரங்களில் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் டம்ளர் மற்றும் பாட்டில்கள் வீசி செல்வதால் வன விலங்குகளுக்கு அபாயம்



நீலகிரி மாவட்டத்தில் தடை செய்யப்பட்டுள்ள பிளாஸ்டிக் பொருட்களை வனப் பகுதிகளில் வீசி விட்டு செல்வதால் குரங்கு உள்ளிட்ட வன விலங்குகள் அதனை உட்கொண்டு இறக்கும்அபாயம்ஏற்பட்டுள்ளது

மலை மாவட்டமான நீலகிரி யானை, புலி, சிறுத்தை, கரடி, மான், காட்டெருமை உள்ளிட்ட பல்வேறு வனவிலங்குகளின் புகலிடமாக திகழ்ந்து வருகிறது. இந் நிலையில் இயற்கையை பாதுகாக்கவும், சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் நீலகிரி மாவட்டத்தில் பிளாஸ்டிக் பொருட்கள் தடை செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக பிளாஸ்டிக் டம்ளர்கள், தட்டுகள் உள்ளிட்ட 19 வகையான பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மாவட்ட எல்லைப் பகுதிகளில் சுற்றுலா வாகனங்கள் முழுமையாக ஆய்வு செய்யப்பட்டு அனுமதி அளித்து விடுவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்நிலையில் குன்னூர் மேட்டுப்பாளையம் மலைப்பாதையில் பயணிக்கும் ஒரு சில சுற்றுலா பயணிகள்தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் டம்ளர் மற்றும் பாட்டில்களை சாலையை ஒட்டி உள்ள பகுதிகளில் வீசி செல்வதால் வனப் பகுதிகளில் வீசி செல்லப்படும் பிளாஸ்டிக் கவர்களின் அடைக்கப்பட்டுள்ள பொருட்களை எடுத்து குரங்குகள் அதனை உட்கொள்வது மட்டுமின்றி பிளாஸ்டிக் கவர்களையும் உட்கொள்ளும் அபாயம் ஏற்பட்டு வருகிறது. இதனால் குரங்குகள் மற்றும் வன விலங்குகள் உயிரிழக்கும் அபாயம் ஏற்பட்டு வருகிறது.

எனவே வனத்துறையினர்தடை செய்யப்பட்டுள்ள பிளாஸ்டிக் பொருட்களை வனப்பகுதிகளில் வீசி செல்பவர்களை கண்டறிந்து கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வன ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# ராஜகோபாலன்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் அரசுப் பள்ளிக்கு இணையாக நடைபெற்ற 98 வது ஆண்டு பள்ளி ஆண்டு விழா



ஆசிரியர்கள் ஊர் பொதுமக்கள் ஒன்றிணைந்துதிருவிழாவைப் போல் கொண்டாடினர்.

தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி அருகே ராஜகோபாலன்பட்டியில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் 98 வது ஆண்டு விழா மாநில நல்லாசிரியர் ராதாகிருஷ்ணன் தலைமையிலும் வட்டார கல்வி அலுவலர்கள் உமாராணி வீராசாமி மற்றும் தெற்கு தெரு நாட்டாமை வெங்கட்ராமன் வடக்குத்தெரு நாட்டாமை சுரேஷ் பாண்டியன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது. ஆண்டு விழா நிகழ்ச்சியை பள்ளி தலைமை ஆசிரியர் ஊமைத்துறை வரவேற்புரை வழங்கினர். இந்த நிகழ்ச்சியில் பள்ளி மாணவ மாணவிகள் தமிழர்களின் பாரம்பரிய முறைபடி கரகாட்டம் ஒயிலாட்டம் தேவராட்டம் உள்ளிட்ட பாடல்களுக்கு ஆடியதோடு சினிமா பாடல்களுக்கும் ஆடி பாடி மகிழ்ந்தனர். மேலும் பல்வேறு வகையான யோகாசனங்களை செய்து காட்டியும் பார்வையாளர்களை பிரமிக்க வைத்தனர். மேலும் இந்த நிகழ்ச்சியை பள்ளி ஆசிரியர்கள் மற்றும் ஊர் பொதுமக்கள் ஒன்றிணைந்து வண்ண வண்ண விளக்குகள் தோரணைகள் கட்டி ஊர் திருவிழாவைப் போல் தனியார் பள்ளிகளுக்கு இணையாக அரசு பள்ளி ஆண்டு விழாவை கொண்டாடினர்.

# உலக மகளிர் தின விழா



கிருட்டினகிரி மாவட்ட அரசு அலுவலர் ஒன்றியத்தின் சார்பாக 08.03.2026 அன்று காலை 10.00 மணியளவில் R.C பாத்திமா சர்ச் வளாகத்தில் அமைந்துள்ள R.C பாத்திமா ஆண்கள் உயர்நிலைப் பள்ளியில் உலக மகளிர் தின விழா தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய மாவட்டத் தலைவர் திரு.என்.எஸ்.கார்த்திகேயன் அவர்கள் தலைமையில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் ஒன்றியத்தின் மாவட்ட துணைத் தலைவர் திருமதி.க. அஞ்சலா, அங்கன்வாடி பணியாளர்கள் ஒன்றிய மேனாள் மாவட்டத் தலைவர் திருமதி.தேவகி , ஒன்றியத்தின் மாநில செயலாளர் திரு. மா.அந்தோணி ஆல்பர்ட் , மற்றும் ஒன்றியத்தின் மேனாள் மாவட்டச் செயலாளர் திரு.க.பன்னீர் செல்வம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

# மருத்துவ குணம் நிறைந்த கேப் கூஸ் பெர்ரி பழ சீசன் துவங்கியது



நீலகிரி மலைப் பகுதிகளில் காணப்படும் கேப் கூஸ்பெர்ரி பழம்

இயற்கையாக வளரும் ஒரு முக்கியமான பழமாக விளங்கி வருகிறது. சிறிய மஞ்சள் நிறத்தில் காணப்படும் இந்த பழம் காகிதம் போன்ற உலர்ந்த உறையால் மூடப்பட்டிருப்பது இதன் தனிச் சிறப்பாகும். தென் அமெரிக்காவின் ஆண்டிஸ் மலைப்பகுதிகளை தாயகமாக கொண்ட இந்த பழம் பின்னர் உலகின் பல நாடுகளுக்கு பரவி தற்போது இந்தியாவின் மலைப் பகுதிகளிலும் வளர்க்கப்படுகிறது. குறிப்பாக நீலகிரி மலைப்பகுதிகளில் இந்த செடி இயற்கையாக வளரக்கூடிய தன்மை கொண்டதாக உள்ளது.

இந்த பழத்தில் விட்டமின் சி, நார்ச்சத்து மற்றும் தடுப்பு மருந்தாகவும் இருப்பதால்,அதிகமாக உடல் நலத்திற்கு பல நன்மைகளை அளிப்பதாக மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். குறிப்பாக நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கவும், செரிமானத்தை மேம்படுத்தவும் உதவுகிறது.

மேலும், சில பகுதிகளில் இந்த பழத்தை கொண்டு ஜூஸ், ஜாம் மற்றும் இனிப்பு உணவுகள் தயாரித்து பயன்படுத்தப்படுவதும் குறிப்பிடத்தக்கது. மலைப்பகுதிகளில் இயற்கையாக கிடைக்கும் இந்த பழ சீசன் இம்மாதம் துவங்கி மே மாதம் இறுதி வரை மலைப் பாதையில் மற்றும் கிராமப்புற சாலையோரங்களில் அதிக அளவில் காய்த்துள்ளது. இதனை சிறு வியாபாரிகள் பறித்து சென்று நடைபாதை கடைகளில் ஒரு கிலோ பழம் ரூ.300 வரை விற்பனை செய்து வருகின்றனர். இந்த இயற்கை மருத்துவ குணம் உள்ள பழம் குறித்து பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வு அதிகரித்து வருவதாகவும் கூறப்படுகிறது.





செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் வட்டம் புலி கொரடு கிராமத்தில் எழுந்தருளி அருள்பாலிக்கும் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஓம் மகாகணபதி ஓம் பாலமுருகன் ஆகிய கோயில்களுக்கு ஜீரனோதாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா வெகு சிறப்பாக நடைபெற்றது இதில் விழா குழுவினர்கள்K குமார்D குமார் ஆறுமுகம் சந்திரன் கர்ணன் ஜெகநாதன் நாகலிங்கம் கண்ணதாசன் ஆகியோர் முன்னிலையில் திரு உமாபதி சிவம் திரு ராஜேஷ் குருக்கள் தலைமையில் சிவாச்சாரியார்கள் கலச வேள்வி பூஜை செய்து ஊர்வலமாக வந்து வேத மந்திரங்கள் முழங்க கைலாய வாத்தியத்துடன் கும்பாபிஷேக பெருவிழா சிறப்பாக நடைபெற்றது விழாவில் புலிக் கொரடு கிராமத்தினர் மற்றும் சுற்றுவட்டாரத்தில் உள்ள 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது விழாவிற்கு மேல்மருவத்தூர் காவல் நிலைய ஆய்வாளர் சுரேந்திரன் அச்சிறுப்பாக்கம் தலைமை காவலர் முத்துக்குமார் பொதுமக்களுக்கு பாதுகாப்பு அளித்தனர்

தின கனி

10:04:2026

# கீழமாத்தூர் பள்ளிவாசலில் சமூக நல்லிணக்க இப்தார் விருந்து



மதுரை மாவட்டம் கீழ மாத்தூர் ஜும்மா தொழுகை பள்ளிவாசலில் சமூக நல்லிணக்கம் இஸ்லாமிய ரம்ஜான் மாதம் முன்னிட்டு இப்தார் விருந்து நிகழ்ச்சி நடைபெற்றது கீழமாத்தூர் ஜும்ஆ பள்ளிவாசல் ரமலான்பண்டிகை முன்னிட்டு நடந்த இப்தார் விருந்தில் மதுரை சமயநல்லூர் ஆர் சி சர்ச் தலைமை மதகுரு மற்றும் ஆர் சி ஹை ஸ்கூல் மற்றும் ஜான் பிரிட்டோ நர்சரி பிரைமரி ஸ்கூல் கரஸ்பாண்டன்ட் ஃபாதர் எம் எஃப் மார்ட்டின் ஜோசப் அவர்கள் கலந்து கொண்டார் அவர் சமூக நல்லிணக்கம் குறித்து மனித சமுதாயம் மனதளவில் பிறருக்கு உதவி செய்தல் அன்பு பண்பு பாசத்துடன் பழகுதல் நல் உறவுகளுடன் மனித நேயத்துடன் சமுதாயம் ஒழுக்கம் நேர்மையாக நடந்து கொண்டால் தமிழகம் மேன்மேடையும் ஒவ்வொரு மனிதரும் கட்டாயம் கடைப்பிடித்து வந்தால் நல் உறவுகள் வளரும் இதில் இப்தார் விருந்து அனைத்து சமுதாயத்திற்கும் எடுத்துக்காட்டாக உண்மையாக விளங்குகிறது என்றார்

பள்ளிவாசல் இமாம் ஏ கே அப்துல் காதர், ஹஜ்ரத் ஏ அப்துல் மஜீத் பாய், செயலாளர் எஸ்சிராஜுதீன் பாய், பொருளாளர் ஆர் பஷீர் அஹமது பாய் மற்றும் ஜமாஅத்தார்கள் அனைவரும் ஒன்றிணைந்துஜமாஅத்சார்பாகபொன்னாடை போர்த்தி ஃபாதர்அவர்களுக்கு கண்ணியம் செய்யப்பட்டது பின்பு ரமலான் இப்தார் நோன்பு விருந்து உபசரிப்பு நடைபெற்றது அனைவரும் ரம்ஜான் நல்வாழ்த்துக்கள் கூறி மகிழ்ச்சி அடைந்தனர்

# மயிலாடுதுறையில் ட்ரீம்ஸ் இந்தியா சார்பாக உலக மகளிர் தின விழா மகளிர் மற்றும்,மின்வாரிய ஊழியர்களுக்கு விருது




மயிலாடுதுறையில் தனியார் திருமண மண்டபத்தில் ட்ரீம்ஸ் இந்தியா நிறுவனம் தலைவர் விஜயன் தலைமையில் உலக மகளிர் தினம் கொண்டாடப்பட்டது இதில் வீரநாச்சியார் விருது, வெற்றிகொடி கட்டு விருதுமாணிக்க மாணவர் விருது,பாரத தூன்கள் விருது வழங்கபட்டது .

சமூகத்தில் ஆணுக்கு நிகராக மாற்றம் கொண்டு வரும் மகளிருக்கு 25 துறைகளில்,சாதித்த பெண்களை கண்டறியப்பட்டு அவர்களை ஊக்குவிக்கும் விதமாக வீரநாச்சியார் விருது.நோயால் பாதிக்கப்பட்டோருக்கு வறுமையில் உள்ள பெண்களுக்கும்,மாற்று திறனாளிகளுக்கும் நிவாரணம் வழங்கப்பட்டது,தொடர்ந்து மின்வாரிய ஊழியர்களுக்கு,மழையிலும் புயலிலும் பனியிலும் வெயிலிலும் அயராது பாடுபட்டு நம் வீட்டையும் நாட்டையும் ஒளிர செய்யும் தமிழ்நாடு மின்சார வாரிய ஊழியர்களின் அர்ப்பணிப்பை போற்றும் வண்ணம் மின்சுடர் நாயகன் விருதும்,இன்றைய கல்வியால் சிறந்து விளங்கும் மாணவ மாணவிகளின் திறமையை ஊக்குவித்து இவ்வுலகிற்கு அறிய செய்த தாய்மார்களுக்கு வெற்றி கொடி கட்டு விருதும்,தடைகள் பல கடந்து வீரநடைபெற்று தன் கல்லூரி படிப்பை முடித்து பன்னாட்டு நிறுவனங்களில் வேலையில் அமர்ந்து வளர்ச்சிக்கு வித்திட்ட மாணவர்களுக்கு மாணிக்கம் மாணவர் விருதும்,பல்வேறு நலத்திட்டங்களை சமூக தொண்டாற்றி வரும் ட்ரீம்ஸ் இந்தியா பவுண்டேஷனுக்கு உறுதுணையாக இருந்து வரும் மங்கையர்களுக்கு பாரதவசியங்கள்விரும்,வழங்கப்பட்டு சிறப்புடன் நடைபெற்றது இதில் 250க்கு மேற்பட்ட மங்கையர்களுக்கு விருது வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# தாராபுரத்தில் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு சிஎஸ்ஐ (லிஸ்டர்) விடுதியில் மாணவிகளுக்கு சிறப்பு உணவு வழங்கல்





திருப்பூர் மாவட்டம் தாராபுரம்நகராட்சிக்கு உட்பட்ட பொள்ளாச்சி சாலையில் அமைந்துள்ள சி.எஸ்.ஐ (லிஸ்டர்) விடுதியில் நேற்று (08.02.2026)திருப்பூர் கிழக்கு மாவட்டம் மகளிர்அணி மகளிர்அணி தொண்டரணி சார்பாக மகளிர் தின விழா மகளிர் தின விழாவை முன்னிட்டு மாணவிகளுக்கு மதிய சிறப்பு அசைவ உணவு வழங்கப்பட்டது . இந்த நிகழ்ச்சியில் மாவட்ட மகளிர்அணி தலைவர் சரஸ்வதி ராஜேந்திரன், மாவட்ட துணை செயலாளர் திருமதி.பிரபாவதி பெரியசாமி,மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர்

திருமதி.சசிகலா தில்லை முத்து, மாவட்ட மகளிர் மகளிர் அணி துணைத்தலைவர் திருமதி. அருக்காணி ராமசாமி ஆகியோர்களின் தலைமையில்,

மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் செல்வராஜ், நகராட்சி நகர் மன்ற தலைவர் பாப்பு கண்ணன், திமுகநகரசெயலாளர்முருகானந்தம் ஆகியோர்களின் முன்னிலையில் நடைபெற்றது.

மேலும், மாவட்ட மகளிர் அணி துணைஅமைப்பாளர்திருமதி.அமுதவள்ளி, மாவட்ட மகளிர்தொண்டரணி து.அமைப்பாளர் திருமதி. ஷஜிதா பானு, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் திருமதி.ஆனந்தி, நகர மகளிர் அணி அமைப்பாளர் திருமதி.புனிதா சக்திவேல், நகரத் துணைச் செயலாளர் திருமதி. செலின் பிலோமினா, நகரத் தொண்டரணி அமைப்பாளர் திருமதி.முத்துலட்சுமி, கவுன்சிலர்கள் திருமதி. தேவி அபிராமி, திருமதி. ராஜாத்தி,மருத்துவரணி தலைவர் திருமதி.இந்திராணி நகர துணை அமைப்பாளர்கள்சந்திரா, உமா, மற்றும் மீனவர் கூட்டுறவு சங்கத் தலைவர் தில்லையப்பன், மாவட்ட மீனவர் அணி தலைவர் மரக்கடை கணேசன், இளைஞரணி ராஜராஜன், தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர் ஹைடெக். அன்பழகன் மற்றும் பலர் கலந்து கொண்டு இந்நிகழ்ச்சியை சிறப்பித்தனர்..

# அம்பல் ஊராட்சியில் கிராம அறிவு மையக்கூடம் அடிக்கல் நாட்டு விழா



நாகை மாவட்டம் திருமருகல் ஒன்றியம் அம்பல் ஊராட்சியில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை (தாட்கோ) சார்பில் நபார்டு திட்டத்தின் கீழ் ரூ. 80 லட்சத்து 23 ஆயிரம் மதிப்பீட்டில் கிராம அறிவு மையக்கூடம் அடிக்கல் நாட்டு விழா நேற்று நடைபெற்றது. விழாவிற்கு வட்டார ஆத்மா குழு தலைவர் செல்வ செங்குட்டுவன் தலைமை தாங்கினார். ஊராட்சி ஒன்றிய ஆணையர் ஹரிகிருஷ்ணன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கார்த்திக் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர் கௌதமன், தாட்கோ தலைவர் இளையராஜா ஆகியோர் கலந்து கொண்டு அடிக்கல் நாட்டி கட்டுமான பணிகளை தொடங்கி வைத்தனர். இதில் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் விவேகானந்தன், சீதளாபாலாஜி மற்றும் அரசு அலுவலர்கள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

# அனைத்திந்திய விவசாய மற்றும் தொழிலாளர்கள் சங்கத்தின் புதிய நிர்வாகி தலைவர் ஜி.கே. விவசாய மணி நியமித்தார்




அனைத்திந்திய விவசாய மற்றும் தொழிலாளர்கள் சங்கத்தின் கலந்தாய்வு கூட்டம் திருப்பூர் பிரிட்ஜ்வே காலனியில் உள்ள சங்க தலைமை செயலகத்தில் நடைபெற்றது கலந்தாய் கூட்டத்தில் சங்க நிறுவன தலைவர்ஜி.கே.விவசாயமணி(எ)ஜி.சுப்பிரமணியம் அவர்கள் இடுவாய் ஊராட்சி மகளிர் அணி தலைவியாக திருமதி P. ராஜேஸ்வரி அவர்களை நியமனம் செய்தார் அவருக்கு தலைவர் அவர்கள் பச்சை துண்டு அணிவித்து வாழ்த்துக்களை தெரிவித்தார் இந்த கூட்டத்தில் கலந்து கொண்ட சங்க நிர்வாகிகள் மகளிர் அணியினர் புதிய நிர்வாகிக்கு வாழ்த்துக்களை தெரிவித்தனர்

# பசியிலிருந்து விடுதலை பயத்திலிருந்து விடுதலை




திருப்பூர்தெற்கு மாவட்டம் தாராபுரம் தொகுதி SDPI கட்சியின் சார்பில் சமூக நல்லிணக்க இஃப்தார் நிகழ்ச்சி தாராபுரம் சின்ன பள்ளிவாசல் மதரஸா மண்டபத்தில்நடைபெற்றதுஇவ்விழாவிற்கு தலைமை M.மன்சூர் அலி தாராபுரம் தொகுதி தலைவர் எம் மன்சூர் அலி வரவேற்புரைM.சையது அபுத்தாஹிர் தாராபுரம் நகர தலைவர் நிகழ்ச்சி தொகுப்பாளர் R.சிக்கந்தர் பாதுஷா, தாராபுரம் தொகுதி செயற்குழு உறுப்பினர்மு ன்னிலைJ.சையது அபுதாஹிர், திருப்பூர் தெற்கு மாவட்ட அமைப்பு பொதுச்செயலாளர் H.முகமது இலியாஸ் மாவட்ட செயற்குழு உறுப்பினர் மற்றும் தொகுதி,நகர,கிளை, மகளிர் அணி (WIM) நிர்வாகிகள்சி றப்பு அழைப்பாளர்கள்தி முக, காங்கிரஸ்,த.மு.மு.க. ம.ம.க,விசிக,தமிழ் புலிகள் கட்சி,கொங்குநாடு இளைஞர் பேரவை,பகுஜன் சமாஜ் கட்சி நிர்வாகிகள் ஆகியோர் பெருந்திரளாக கலந்து கொண்டனர். இவ்விழாவில் சிறப்புரை பாஸ்டர். V.மார்க் SDPI கட்சி மாநில செயலாளர்M.ஹாரிஸ் பாபு திருப்பூர் தெற்கு மாவட்ட தலைவர்நன்றியு ரை A.சாகுல் அமீது, தாராபுரம் நகர செயலாளர் திரு பாப்பு கண்ணன் அவர்கள் நகரமன்றதலைவர்தாராபுரம், திருமுருகானந்தம் திமுக நகர செயலாளர், காங்கிரஸ் முன்னால் மாவட்ட தலைவர் தென்னரசு, உள்பட பலர் கலந்து கொண்டனர்.



சேலம் சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு ஜேசிஐ சேலம் ஸ்டீல் பெமீனா அமைப்பின் சார்பில்ஜே சிஐ எச்ஜிஎப் பூஜா அவர்களின் தலைமையில்பெ ண்கள் தின சிறப்பு விழா சேலம் பொறியாளர் அசோசியேஷன் ஷாலில் சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில்சே லம் மாநகராட்சி மேயர் இராமச்சந்திரன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, கல்வி, சமூக சேவை, தொழில், கலை, மருத்துவம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கும் பெண்களுக்கு சிறந்த பெண்கள் விருதுகளை வழங்கியும்பெண்களின் சாதனைகளை பாராட்டியும் விருதுகள் வழங்கப்பட்டன.



சேலம் எம்.ஜி.ஆர் புகழ்பாடும் இதயக்கனி மாத இதழின் வெள்ளி விழாவிற்கு வருகை புரிந்த பிரபல திரைப்பட நடிகர் பெஞ்சமின் அவர்களுக்கு உயிர் மெய்த் தமிழ்ச்சங்கம் , உலகத்தமிழர் பண்பாட்டு இயக்கம் சார்பில் சேலத்து பாரதி சொல்லரசர் சால்வை அணிவித்தார். அருகில்பாடகர் ரா. சு. யுவராசு உள்ளார்.



திருப்பூர் மாநகராட்சி மாண்புமிகு மேயர் திரு.ந.தினேஷ்குமார் அவர்கள் தலைமையில் (06.03.2026) மைய அலுவலக வளாகத்தில் தூய்மை பணியாளர்களை தொழில் முனைவோராக மாற்றும் திட்டத்தின் மூலம் மாநகராட்சி பணிகளுக்காக கழிவு நீர் அகற்றும் 6000 லி கொள்ளளவு கொண்ட வாகனத்தை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். உடன் துணை மேயர் திரு.ரா. பாலசுப்ரமணியம், மாநகர நல அலுவலர் மரு. முருகானந்த், துணை ஆணையாளர் திருமதி எஸ்.சித்ரா, உதவி ஆணையாளர் (மண்டலம்2) திருமதி பாரிஜான், நவஜீவன் நிறுவனத்தின் தமிழ்நாட்டு ஒருங்கிணைப்பாளர் திரு.ரவி, சுகாதார அலுவலர்கள், சுகாதார ஆய்வாளர்கள், மாநகராட்சி அலுவலர்கள், நிதி வழங்கும் வங்கி (பேங்க் ஆப் பரோடா) (ராக்கியாபாளையம் கிளை) உட்பட பலர் உள்ளனர்.

# பெரியகுளத்தில் மாபெரும் சமூக நல்லிணக்க இஃப்தார் நிகழ்ச்சி: ஓ பன்னீர்செல்வம் தேனி பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் ஜமாத் தலைவர்கள் கலந்து கொண்டனர்




தேனி மாவட்டம் பெரியகுளம் அனைத்து பள்ளிவாசல் ஜமாஅத்தார்கள்சார்பாக பெரியகுளம் அருகே உள்ள A. புதுப்பட்டி பகுதியில் உள்ள ஜாமிஆ அல் அஷரத்துல் முபஷ்ஷரா இறையியல் கல்லூரியில் மாபெரும் சமூக நல்லிணக்க இஃப்தார் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் முன்னாள் முதல்வர் ஓ பன்னீர்செல்வம் பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் சரவணகுமார் மற்றும் ஜமாத் தலைவர்கள், அனைத்து ஜமாத் இஸ்லாமியர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்

இந்த இப்தார் நோன்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட முன்னாள் முதல்வர் ஓ பன்னீர்செல்வம் ரம்ஜான் பண்டிகை முன்னிட்டு 30 நாட்கள் இஸ்லாமிய பெருமக்கள்கடுமையானவிரதங்களை கடைப்பிடித்து வருகின்றனர் மேலும் ரம்ஜான் மாதங்களில் தமிழக அரசின் சார்பாக இஸ்லாமிய பெருமக்களுக்கு தமிழக முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்கள் பல்வேறு திட்டங்களையும் செய்து வருகிறார்

அதனைத் தொடர்ந்து இஸ்லாமிய பெருமக்களுடன் முன்னாள் முதல்வர் ஓபிஎஸ் தேனி எம்பி எம்எல்ஏ மற்றும் திமுக கட்சி நிர்வாகிகள் பொதுமக்கள் கூட்டணி கட்சி நிர்வாகிகள் அனைவரும் ஒன்றிணைந்து இப்தார் நோன்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு நோன்பு கஞ்சி அருந்தினர்

இந்நிகழ்ச்சியின் முன்னாள் ஜமாத் தலைவர் அபுதாஹிர், அல்ஹாஜ் மௌலானா அஜீஜுர் ரஹ்மான், JAM. இறையியல் கல்லூரி நிறுவனர் முதல்வர் முஹம்மது ஹுஸைன், தலைவர் மக்கா பள்ளிவாசல் அப்துர் ரஹ்மான், பெரியகுளம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், திமுக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் மூக்கையா மற்றும் இஸ்லாமியர்கள் பொதுமக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் (09.03.2026) நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும்நாள்கூட்டத்தில்மாவட்டவருவாய்அலுவலர்திரு.சு.சாந்தகுமார்அவர்கள் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெற்று, குறைகள் கேட்டறிந்தார்.



திருவண்ணாமலை மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இரா.இராம்பிரதீபன் அவர்கள் (09.03.2026) திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலுள்ள மக்கள் குறைத்தீர்வு நாள் கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்கள்.



தேனி மாவட்ட விளையாட்டு மைதானத்தில் (08.03.2026) இந்திய அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தின் இந்திய விளையாட்டு ஆணையம் மற்றும் மைபாரத்சார்பில்சர்வதேசமகளிர்தினத்தைமுன்னிட்டுபெண்களிடையேவிளையாட்டை ஊக்கப்படுத்தும் விதமாக நடைபெற்ற ஓட்டப் போட்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ரஞ்ஜீத் சிங், இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.



திருவள்ளூர்மாவட்டஆட்சியர்அலுவலகசிறப்புமக்கள்குறைதீர்க்கும்நாள்கூட்டரங்கில் (09.03.2026) மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சு.சுரேஷ், அவர்கள் மாற்றுத்திறனாளிகளிடம் இருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டு அதற்கு தீர்வுக்கான சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் உத்திரவிட்டார். உடன் தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) திரு.வெங்கடேசன், மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் திரு.குமார் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.



தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக அதியன் கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ஆ கவிதா அவர்கள் பொது மக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்.

## அம்பலூர் பாலாற்றின் தரைப்பாளத்தை இடிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து விவசாயிகள் சங்கத்தினர், சிறிது நேரம் பரபரப்பு



திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அடுத்த அம்பலூர் கிராமத்தில் பாலாற்றில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக கடந்த 40 ஆண்டுகளுக்கு முன்பு தரைப்பாலம் அமைக்கப்பட்டு அதனை மக்கள் எக்லாஸ்புரம், வடக்குப்பட்டு, திம்மம்பேட்டை, புத்துக்கோயில் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் செல்ல பயன்படுத்தி வந்தனர்.

இந்த நிலையில் பாலாற்றில் வெள்ளம் ஏற்படும் போது தரைப்பாளத்தை பயன்படுத்த முடியாமல் பொதுமக்கள் இக்கரையில் இருந்து அக்கரைக்கு செல்வதற்கு சிரமப்பட்டு வந்தனர்.

இந்த நிலையில் மேம்பாலம் அமைத்து தரவேண்டும் என சங்கத் தலைவர் அசோகன் மாநில பொது செயலாளர் கார்த்திகேயன் இவரின் முயற்சியால் கிராம மக்கள் விவசாயிகள் தொடர்ந்து கோரிக்கை வைத்ததின் அடிப்படையில் நெடுஞ்சாலைத்துறை நபார்டு மற்றும் கிராம சாலைகள் 2021 22 திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டு 26 கோடியே 50 லட்சம் மதிப்பீட்டில் உயர்மட்ட பாலம் கட்டப்பட்டு தற்போது திறந்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர உள்ள நிலையில். ஏற்கனவே இருந்த தரைப்பாளத்தை அதிகாரிகள் ஜேசிபி இயந்திரம் மூலம் அப்புறப்படுத்தி வருகின்றனர். இதற்கு விவசாயிகள் பாலாறு பாதுகாப்பு விவசாயிகள் சங்கத்தின் மற்றும் பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். மேலும் ஏற்கனவே இருக்கக்கூடிய தரைப்பாலத்தை இடிக்கக் கூடாது எனவும் இடிக்கப்பட்டால் அங்கு அதிகளவில் மணல் கொள்ளை ஏற்படும் எனவும், மேலும் நீர் மட்டம் கீழ் மட்டத்துக்கு சென்று பாதிக்கப்படும் இந்த தரப்பாலத்தை நெல் களமாக மக்கள் அவ்வப்போது பயன்படுத்தி வருவதாகவும் விவசாயிகள் பாலாறு பாதுகாப்பு விவசாயிகள் சங்கத்தினர் தெரிவித்தனர்.

அதனை தொடர்ந்து அம்பலூர் காவல்துறையினர் அவரிடம் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு பின்னர் இதுகுறித்து மாவட்ட ஆட்சியரிடம் பேசி பாலாறு பாதுகாப்பு சங்கத்தினர் கடந்த வருடம் மாவட்ட ஆட்சியரிடம் மனுவாக வழங்கி கோரிக்கை வைத்துள்ளோம் அதனால் மாவட்ட ஆட்சியரிடம் உரிய பேச்சுவார்த்தை நடத்தி அதன் பிறகு பாலத்தின் பணியை தொடங்குங்கள் என்று கோரிக்கை வைத்ததின் அடிப்படையில் பொதுப்பணித் துறை துணை பொறியாளர் நடவடிக்கை எடுக்கப்படும் என கூறியதின் அடிப்படையில் அங்கிருந்து பலர் பாதுகாப்பு விவசாயிகள் சங்கத்தினர் மற்றும் பொதுமக்கள் கலந்து சென்றனர்..

## 250 பெண்கள் கலந்து கொண்ட தேநீர் போட்டி



ஹைபிஸ் தொலைக்காட்சி நடத்திய தெலுங்கானா தேநீர் சாம்பியன்ஷிப்2026நிகழ்ச்சியில் 250க்கும் மேற்பட்ட தனித்துவமான மற்றும் புதுமையான தேநீர் வகைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இஞ்சித் தேநீர், வெல்லத் தேநீர், புதினா தேநீர், ஏலக்காய் தேநீர், லெமன் கிராஸ் தேநீர் போன்ற பாரம்பரிய வகைகளுடன், பீட்ரூட் தேநீர் போன்ற புதுமையான கலவை தேநீர் வகைகளும் காட்சிப்படுத்தப்பட்டன. பாரம்பரிய சுவைகளுடன் சேர்த்து பல்வேறு படைப்பாற்றலான மற்றும் பரிசோதனை முறையிலான தேநீர் வகைகளை போட்டியாளர்கள் தயாரித்து, பார்வையாளர்களையும் தேநீர் விரும்பிகளையும் கவர்ந்தனர்.

இந்த போட்டியில் பெண்கள் மிகுந்த ஆர்வத்துடனும் படைப்பாற்றலுடனும் கலந்து கொண்டனர். இல்லத்தரசிகள், பணியாற்றும் பெண்கள், இளம் தொழில் முனைவோர் மற்றும் தெலங்கானாவின் பல துறைகளில் செயல்படும் பெண்கள் கலந்து கொண்டு பல்வேறு புதிய தேநீர் சுவைகளை அறிமுகப்படுத்தினர்.

இந்த போட்டி பெண்களுக்கு மட்டுமே நடத்தப்படும் உலகிலேயே தனித்துவமான தேநீர் சாம்பியன்ஷிப் என்ற சிறப்பை பெற்றுள்ளது. நோவோடேல் ஹைதராபாத் கன்வென்சன் வளாகத்தில் வளாகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் 250க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டு தயாரித்த பல்வேறு தேநீர் வகைகளை பார்வையாளர்கள் ரசித்தனர்.

இந்த நிகழ்ச்சி இந்திய தேயிலை வாரியம் மற்றும் தெலுங்கானா சுற்றுலாத் துறை ஆகியவற்றின் ஆதரவுடன் நடத்தப்பட்டது. பொதுமக்களிடம் தேநீரின் முக்கியத்துவம் மற்றும் அதன் உடல் நல நன்மைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

இந்த போட்டியின் 5வது பதிப்பு சிறப்பாக நிறைவடைந்தது. நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக படேல் ரமேஷ் ரெட்டி (தெலுங்கானா சுற்றுலா மேம்பாட்டுக்கழக தலைவர்), பரணி குமார், ஐஏஎஸ் (இந்திய தேயிலை வாரியம் குன்னூர் மண்டல அலுவலக நிர்வாக இயக்குநர்), காவ்யா கிஷன் ரெட்டி மற்றும் காஷ்வி (மிஸ் யுனிவர்ஸ் தெலுங்கானா 2025 வெற்றியாளர்) கலந்து கொண்டு வெற்றியாளர்களுக்கு பரிசுகளை வழங்கினர்.

இந்த நிகழ்ச்சிக்கு ஏ ஒன் டீ கம்பெனி (தேநீர் கூட்டாளர்), சுபன் பேக்கரி (பேக்கிங் கூட்டாளர்), ஸ்வஸ்திக் ஸ்பைசஸ் மற்றும் த்ரீ மேங்கோ (மசாலா கூட்டாளர்கள்), மனேபல்லி ஜிவெல்லர்ஸ் (நகை கூட்டாளர்) மற்றும் ஹோட்டல் மேலாண்மை நிறுவனம் ஹைதராபாத் (விருந்தோம்பல் கூட்டாளர்) ஆகியோர் ஆதரவளித்தனர். போட்டியில் நாராயணகுடாவைச் சேர்ந்த ரச்சனா தனது “21 மூலிகை தேநீர்” என்ற தேநீர் வகைக்காக ₹1,00,000 முதல் பரிசை பெற்றார். மல்லம்பேட்டைச் சேர்ந்த உஷா ராணி தனது மசாலா தேநீர் வகைக்காக ₹50,000 இரண்டாம் பரிசை பெற்றார். கொண்டாபூரைச் சேர்ந்த பிரியங்கா தனது புதினா, லெமன் கிராஸ் மற்றும் இஞ்சியுடன் கலந்த மசாலா தேநீர் வகைக்காக ₹25,000 மூன்றாம் பரிசை பெற்றார். மேலும் 50க்கும் மேற்பட்ட ஊக்கப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த டாக்டர் ஜே சந்தியா ராணி, ஹைபிஸ் ஒன் நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் மேலாண்மை இயக்குநர், “ஒரே இடத்தில் 250க்கும் மேற்பட்ட பெண்கள் சேர்ந்து தேநீர் தயாரித்து தங்களின் படைப்பாற்றலை வெளிப்படுத்தியதை காணுவது மிகுந்த மகிழ்ச்சியளித்த அனுபவமாக இருந்தது” என்று தெரிவித்தார்.

## செட்டிநாடு, வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பயின்று வரும் சிவகங்கை மாவட்ட மாணாக்கர்கள் தமிழக முதல்வருக்கு நெஞ்சார்ந்த நன்றி



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வேளாண்துறைக்கு அதிக முக்கியத்துவம் அளித்திடும் வகையில், வேளாண் பெருங்குடி மக்களின் வரு



வாயினை பன்மடங்கு உயர்த்திடவும், நிகர சாகுப்படிப் பரப்பினை அதிகப்படுத்தும் பொருட்டு பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். வேளாண் துறையின் எதிர்காலத் தேவைகளை மேற்கொள்ளும் பொருட்டு, பல்வேறு ஆராய்ச்சிகளுக்கும் முக்கியத்துவம் அளித்திடும் வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆகையால்தான் வேளாண்துறை என்பதனை வேளாண்மை – உழவர் நலத்துறை எனப்பெயர் மாற்றப்பட்டு இத்துறையின் முக்கியத்துவம் உணரச்செய்யப்பட்டு இருந்தது.

குறிப்பாக, வேளாண் துறையின் எதிர்காலத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு ஏதுவாக பல்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுவதில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் முக்கிய பங்கு வகித்து வருகிறது.

சிவகங்கை மாவட்டம், செட்டிநாட்டில் செயல்பட்டுவரும் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 61 கோடியே 79 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடத்தினையும்,

புதிதாக கட்டப்பட்ட அரங்கத்திற்கு”பாரத ரத்னா விருது பெற்ற திரு.சி.சுப்பிரமணியம் பல்நோக்கு அரங்கம்” எனப் பெயர் சூட்டி, அவ்வரங்கத்தினையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 31.1.2026 அன்று நேரில் திறந்து வைத்தார்.

இக்கல்லூரிக்கான கட்டடங்கள் சுமார் 2.52 இலட்சம் சதுரஅடி பரப்பளவில் கட்டப்பட்டு, அப்புதிய கட்டடத்தில், நிர்வாக அலுவலகக் கட்டடம், 250 மாணவர்கள் அமரக்கூடிய வகையில் இணையதள வசதியுடன் கூடிய நான்கு வகுப்பு அறைகள், 12 துறைகளுக்கான ஆய்வுக்கூடங்கள், மாணவர் மற்றும் மாணவியர் விடுதிகள், உணவக விடுதி, சிற்றுண்டி விடுதி, மருத்துவ மையம், 1,500 நபர்கள் அமரக்கூடிய பல்நோக்கு அரங்கம், நூலகம் மற்றும் மாணவர்களுக்கான இணையதள மையம் போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இக்கல்லூரியில் மானாவாரிப் பயிர்களான நிலக்கடலை, சிறுதானியங்கள், பயறுவகைகளுக்குத் தேவையான வேளாண் சாகுபடி உத்திகளை உருவாக்குதல், குறைந்த நீர் தேவைப்படும், அதிக மதிப்புள்ள பயிர்களுக்கு முக்கியத்துவம் அளித்தல், வறண்ட மண்டல பழப்பயிர்கள், மரங்கள் மற்றும் தீவனப்பயிர்கள் மேம்பாடு, வேளாண்மை, தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி மற்றும் மரம் வளர்ப்பு போன்றவற்றின் மூலம் நில பயன்பாட்டுக்கான ஒருங்கிணைந்த பண்ணையமுறை, மானாவாரி பயிர்களுக்கான மழைநீர் சேகரிப்பு மற்றும் நுண்ணீர்ப்பாசன அமைப்புகள் நிறுவுதல், பண்ணைக்குட்டைகள் போன்ற நீர்செறிவூட்டு அமைப்புகள் மூலம் உற்பத்தித் திறன் அதிகரித்தல், மானாவாரி நிலங்களில் இயந்திரமயமாக்கல், விவசாயிகள் மற்றும் கிராமப்புர இளைஞர்களுக்கு திறன்மேம்பாட்டு பயிற்சி அளித்தல் போன்ற நோக்கங்களுடன் இக்கல்லூரி செயல்பட்டு வருகிறது.

மேலும், இக்கல்லூரியில் மானாவாரி வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் செயல்பட்டு வருவதுடன், புதிய உணவு செய்முறைகள் மற்றும் பதப்படுத்தும் தொழில்நுட்பங்கள், குறிப்பாக சிறுதானியங்கள், பழங்கள் மற்றும் பிற வேளாண் விளைபொருட்களில் பதப்படுத்துதல், மதிப்புக்கூட்டு



தல் தொழில்நுட்பங்களை உருவாக்கவும், பயிற்சி அளிக்கவும் உணவு பதப்படுத்துதல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் ஒன்றும், மானாவாரி மேலாண்மை மகத்துவ மையம் ஒன்றும் செயல்பட்டு வருகிறது.

2025 ஆம் ஆண்டில், இக்கல்லூரி வறட்சியைத் தாங்கி வளரும், அதிக மகசூல் தரவல்ல “செட்டிநாடு 1” என்னும் புதிய நிலக்கடலை இரகம் வெளியிட்டுள்ளது. மேலும் 10 உள்ளூர் மரவகைகளைக் கொண்டு பன்முகத்தன்மை கொண்ட வேளாண் காடுகள் மாதிரி ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. இது வரை 3,930 விவசாயிகளுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

செட்டிநாடு, வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் இளங்கலை வேளாண் அறிவியல் பயின்று வரும் மாணவி செல்வி நர்மதா அவர்கள் தெரிவிக்கையில்,

எனது பெயர் நர்மதா. நான் திருப்புவனம் பகுதியைச் சேர்ந்தவர். செட்டிநாடு, வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி





நிலையத்தில் இளங்கலை வேளாண் அறிவியலில் மூன்றாம் ஆண்டு பயின்று வருகிறேன்.

எங்களது கல்லூரியின் கட்டுமானப் பணிக்கு கடந்த 2023 ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டு, தற்போது அனைத்து பணிகளும் நிறைவு பெற்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 31.1.2026 அன்று நேரில் திறந்து வைக்கப்பட்டது மேலும் பெருமைக்குரிய ஒன்றாகும்.

நான் குடிமைப் பணிகள் தேர்விற்கு தயார் செய்வதற்கும், இந்தியாவின் பிரதான தொழிலாக விளங்கி வரும் வேளாண்மையினை அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்ற நோக்கி



லும், வேளாண்மை கல்வியினை தேர்வு செய்து பயின்று வருகிறேன்.

இன்றைய காலகட்டத்திற்கு ஏற்றவாறு வேளாண்மை தொழிலினை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச்செல்வதற்கு, வேளாண் சார்ந்த ஆராய்ச்சிகள் முக்கிய பங்கு வகித்து வருகிறது. முன்னதாக, எங்களது கல்லூரியில் புதிய தொழில்நுட்பங்களுடன் கூடிய ஆராய்ச்சி கருவிகள் போதுமானதாக இல்லை.

ஆனால், தற்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ள ரூபாய் 61 கோடியே 79 இலட்சம் மதிப்பீட்டிலான வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய ஆய்வகங்களில் உலக தரத்திலான பல்வேறு ஆராய்ச்சி கருவிகளும் இடம் பெற்றுள்ளது. வேளாண்மைச் சார்ந்து பல்வேறு புதிய கண்டுபிடிப்புக்களை செய்திடல் வேண்டும் என்ற என்னைப் போன்ற மாணவர்களின் எண்ணங்களை பூர்த்தி செய்திடும் வகையில் இக்கல்லூரியானது அமைந்துள்ளது சிறப்பிற்குரியதாகும். மேலும், இப்புதிய கட்டிடத்தில் அமைந்துள்ள நூலகங்கள், பல்நோக்கு அரங்கங்கள், இணையதள மையங்கள் ஆகியவை எங்களது கற்றல் திறன்களை மேம்படுத்திக் கொள்வதற்கு பேருதவியாக உள்ளது.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கல்வியினை ஊக்குவிக்கும் வகையில் புதுமைப் பெண் திட்டம், உலகம் உங்கள் கையில் திட்டம் மற்றும் நான் முதல்வன் திட்டம் போன்ற திட்டங்களையும் செயல்படுத்தி, என்னைப் போன்ற மாணாக்கர்கள் இடைநிற்றலின்றி கல்வியினை தொடர்வதை உறுதி செய்து வருகிறார்கள்.

இவ்வாறாக, மாணாக்கர்களின் கல்வி மேம்பாட்டிற்கென பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தியும், அனைத்து வசதிகளுடன் மாணாக்கர்கள் சிறந்த கல்வியினை பயில வேண்டும் என்ற உயரிய நோக்கிலும், கல்லூரிகளின் பல்வேறு நவீன உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணாக்கர்களின் சார்பில் மகிழ்ச்சியுடன் நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன் என மாணவி செல்வி நர்மதா அவர்கள் தெரிவித்தார்.

::தொகுப்பு::
மு.ராஜசெல்வன்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
சிவகங்கை மாவட்டம்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJAV. CELL: 9443699066